பறவை வேட்டைக்காரன்

இந்தோனேஷியா நாட்டுப்புற கதை



பறவை வேட்டைக்காரன்

இந்தோனேஷியா நாட்டுப்புற கதை

சியா ஹெர்ன் செக்

தமிழில் கிருஷ்ணன்



பறவை வேட்டைக்காரன்


இந்தோனேஷியா நாட்டுப்புற கதை

சியா ஹெர்ன் செக்

தமிழில் கிருஷ்ணன்



ராஜா இசாக்குக்கு வில்வித்தை
என்றால் உயிர். அவருடைய
நண்பர்களோடு இருக்கும் போது கூட
அவர்களெல்லாம் ஏதாவது
பேசிக்கொண்டிருந்தாள்,
ராஜாவுடைய பேச்சு மட்டும்
எப்போதும் வில்லும் அம்பையும்
பற்றியே மட்டும் சுழன்று
கொண்டிருக்கும். இதனால்
வில்வித்தை மீது ராஜா கொண்டிருந்த
காதல் நண்பர்கள் அனைவருக்கும்
நன்றாக தெரியும்.



ராஜாவுக்கு ஒரு அழகான மகள் இருந்தாள். அவள் பெயர் பிண்டாங் தேவி.
அவளுடைய அழகை கண்டு மயங்காத ஆண் மகனே இல்லை என்றே கூறலாம்.

நாட்டிலேயே தலை சிறந்த வில்வீரனுக்கே தன் மகளை கட்டி கொடுப்பேன் என்று ராஜா இசாக் அனைவருக்கும் தெரிவித்து விட்டார்.





தம் மகளுக்கு உரிய துணை ஒன்றை கண்டுபிடிக்க ஒரு நாள் ராஜா தம் நாட்டில் வில்வித்தை போட்டி ஒன்றை நடத்த போவதாக அறிவித்தார்.
நிறைய வீரர்கள் வெவேறு நாடுகளிலிருந்து வந்து போட்டியில் கலந்து கொண்டார்கள்.
ஆனால் ஒருவர் கூட போட்டியில் பரிசை வெல்ல முடியவில்லை. இவ்வளவு அரசர்கள் கலந்துகொண்ட போதிலும் ஒரு சிறந்த வில்வீரனை ராஜாவால் கண்டுபுடிக்க முடியவில்லை.



அதே ஊரில் ஒரு ஏழை பறவை வேட்டைக்காரன் வாழ்ந்து வந்தான். அவன் பெயர் வஜன்.
அவன் தன் நாட்டு ராஜா அவனுடைய அழகிய மகளை ஒரு சிறந்த வில்வீரனுக்கே திருமணம் செய்து வைக்கப்போவதாக கேள்வி பட்டிருந்தான்.
தானே இளவரசியை மணந்து கொண்டால் எப்படி இருக்கும் என்று கனவு கண்டான் வஜன். அதற்கு ஒரு திட்டமும் தீட்டினான்.
அவன் ஒரு வலையை கொண்டு சில காட்டு பறவைகளை பிடித்தான். அவைகளை கொன்று வலது கண்களை நோண்டி எடுத்தான். பின்னர் அவற்றை கயிற்றில் கட்டிவிட்டான். அதை கம்பு ஒன்றில் தொங்க விட்டான்.
அரண்மனையை நோக்கி நடக்க ஆரம்பித்தான். போகும் வழியில் எல்லாம் “ஒற்றை கண் பறவை வேணுமா ! ஒற்றை கண் பறவை வேணுமா !” என்று கூவி கொண்டே சென்றான். ஊரிலிருந்த பிள்ளைகள் எல்லாம் அவனை பின் தொடர ஆரம்பித்தனர். அவர்கள் இதுவரை ஒற்றை கண் பறவையை விற்று வந்த ஒருவரை கூட பார்த்ததில்லை.



போகிற இடமெல்லாம் வஜன் உரக்க கத்தி கொண்டே சென்றான் ““ஓற்றை கண் பறவை வேணுமா ! ஓற்றை கண் பறவை வேணுமா !” கடைசியாக அரண்மனையின் வாசலிற்கு வந்து சேர்ந்தான் வஜன். குழந்தைகளின் கூட்டத்தை தன் வாசலில் பார்த்த ராஜா, வெளியே என்ன நடக்கிறது என்று தன் வேலைகாரனை பார்த்து வர சொன்னார்.





வெளியே சென்று பார்த்து விட்டு வந்த
வேலைக்காரன் “ ராஜாவே வெளியே
ஒரு வேட்டைக்காரன் ஒற்றை கண்
பறவைகளை விற்கிறான்.”
அதை கேட்ட ராஜா “உடனே அந்த
வேட்டைக்காரனை அழைத்து
வாருங்கள்” என்று கூறினார்.
இதனால் வேட்டைக்காரன் வஜனை
ராஜாவிற்கு முன் அழைத்து வந்தார்கள்.
“நீ விற்கும் பறவைகளுக்கு ஒற்றை கண்
மட்டும் தான் உள்ளது என்பது
உண்மையா ”
“ஆமாம் மன்னா நான் வேட்டையாடும்
பறவைகளை ஒற்றை கண்ணில்
வில்லால் அடித்து கொல்வேன்”
என்றான் வஜன்.

வேட்டைக்காரன் சொன்னதை கேட்டு ராஜா இசாக் வியந்து போனார்.
அவன் கூறியதை அவரால் நம்பவே முடியவில்லை
“இளைனனே நீ கூறியது போன்று பறவைகளை அதன் ஒற்றை கண்ணில் அடித்து கொல்வது என்பது அவ்வளவு எளிதான காரியம் இல்லை. நீ தலை சிறந்த வில்வீரனாக இருந்தால் மட்டுமே அது முடியும்” என்றார் ராஜா.
உன்னை போன்ற தலைசிறந்த வில்வீரனுக்கு ஒரு அழகிய மனைவி இருக்க வேண்டாமா?
நீ என் பெண்ணை மணந்து கொள்கிறாயா? என்றார் ராஜா.
மதிப்புற்குரிய ராஜாவே, நான் ஒரு சாதாரண பறவை வேட்டைக்காரன். உங்கள் பெண்ணை மணக்க கூடிய பொருட்செல்வம் எனக்கு கிடையாது. நான் எப்படி உங்கள் மகளுக்கு வசதியான வாழ்க்கையை கொடுக்க முடியும்” என்றான் வஜன்.






“நீ சிறந்த வில்வீரன் மட்டும் அல்ல, சிறந்த மனிதனும் கூட.
உனக்கு வேண்டிய பொருட்செல்வத்தை நான் கொடுக்கிறேன், வீட்டை பொறுத்தவரை நீ எங்கள் கூடவே வந்து அரண்மனையில் வாழலாம்” என்றார் ராஜா.
வஜனுடைய மகிழ்ச்சிக்கோ எல்லையே இல்லை. ஆனால் அவன் அதை வெளியே காட்டி கொள்ளவில்லை.

சிறிது நாட்களிலேயே
கல்யாணமும் நடந்தது.
வஜன் புது உடைகளை அணிந்து
கொண்டான்.
அவனை நினைத்து பெருமிதம்
கொண்டான்.
இப்போது அவனுக்கு எல்லாம்
கிடைத்துவிட்டது
அழகான இளவரசி
மனைவியாக, அரண்மனையே
அவன் வீடாக,
அவனுடை ஆசை நிறைவேறி
விட்டது.





கல்யாண நாளன்று விருந்து தபுடலாக
நடந்தது.
தன்னுடய நண்பர்கள் அனைவரையும்
அழைத்திருந்தார் ராஜா இசாக்
அன்று ஒரு பொன்னாள்.
வண்ண வண்ண பறவைகள் வானத்தில்
பறந்து கொண்டிருந்தது.
விருந்து மிக அருமையாக இருந்தது. இசை
கலைஞர்கள் அருமையாக வாசித்தனர்.
எல்லோரும் இன்புற்றிருந்தனர்.
மகிழ்ச்சியில் திளைத்திருந்த ராஜா
திடிரென்று எழுந்து "இப்போது உலகிலேயே
சிறந்த வில்வீரர் அவரின் வித்தையை
அவரின் அம்பையும் வில்லையும் வைத்து
நமக்கு காட்டுவார்" என்றார் ராஜா.



அதை கேட்ட வஜனுக்கோ
மயக்கமே வந்து விட்டது.
சற்று தடுமாற்றத்திற்கு பின்பு
முழித்து கொண்டு "மதிப்புற்குரிய
ராஜா உங்கள் எல்லோருக்கும் என்
வித்தையை காட்டி பேரானந்தம்
கொடுக்கவே விரும்புகிறேன்,
எனினும் என் வில்லையும்
அம்பையும்
வீட்டிலேயே வைத்துவிட்டு வந்து
விட்டேன். ஆகையால் இப்போது
இயலாது என்றான் வஜன்.
அப்பாடி.. ஒரு வழியாக தப்பித்து
விட்டோம் என்று நினைத்து
கொண்டான் வஜன்.

ஆனால் ராஜாவோ விடுவதாக இல்லை.
“அது ஒரு பெரிய விஷயமில்லை, நீ என்னுடைய ஆயுதங்களை உபயோகித்து கொள்ளலாம்” என்றார் ராஜா.
வஜனுக்கு கை காலெல்லாம் விடுவிடுத்து விட்டது. அவனுடைய உண்மை எல்லோருக்கு தெரிந்து விடுமே என்று பயந்தான்.
அதே நேரத்தில் ராஜாவுடைய வேலைக்காரன் அரசனின் வில்லையும் அம்பையும் எடுத்து வந்தான். ராஜா ஆயுதங்களை வாங்கி வஜனின் கையில் கொடுத்தார் அழுத்தமாக.
இதோ இப்போ உன்னுடைய வித்தையை எங்கள் எல்லோருக்கும் காட்டுவாயாக. என்றார் ராஜா





தன் வாழ் நாளில் வஜன்
வில்லையும் அம்பையும்
உபயோகித்ததே இல்லை.
மெல்ல வில்லை வளைத்து அம்பை
வானத்தை நோக்கி குறி பார்த்தான்
ஆனால் அம்பை விடுவதற்கு
அவனுக்கு தைரியம் இல்லை.
வானத்தில் பறவைகள் சுற்றி பறந்து
கொண்டிருந்தன.
மக்கள் எல்லோருக்கும் சந்தேகம்
துளிர் விட ஆரம்பித்தது. ஏன் இந்த
வில்வீரன் ஒரு பறவையை கூட
வீழ்த்த முடியவில்லை என்று?
சிலர் நகைக்க ஆரம்பித்து
விட்டனர்
“பாருங்கள் அவனால் அம்பையும்
வில்லையும் சரியாக பிடிக்க கூட
முடியவில்லை !” என்று ஒருவர்
சொன்னார்.

கூட்டத்தில் ஒருவொருக்கோ பொறுமையே போய் விட்டது. அவர் வஜனை நோக்கி சென்று அவன் முதுகில் ஓங்கி ஒரு தட்டு தட்டினார். “இப்போதாவது வில்லை விடு” என்று கூறினார்”. முதுகில் விழுந்த உதை அவன் கையிலிருந்து அம்பை வில்லிலிருந்து எய்த செய்தது. அப்போது பார்த்து ஒரு கொக்கு பறக்க, வஜன் விட்ட அம்பு அதை துளைத்தது. கொக்கும் செத்து விழுந்தது.





செத்து விழுந்த பறவையை ராஜா எடுத்து
உற்று நோக்கினார். அம்பு அதன் ஒல்லியான
கழுத்தை கிழித்திருந்தது.
“உன்னை போன்ற வில்வீரனை என்
வாழ்நாளில் பார்த்ததில்லை.” என்றார் ராஜா
எல்லோரும் ஆச்சர்யத்தில் பார்த்து
கொண்டிருந்தனர். வஜன் மட்டும் ஏதோ
கோபத்தில் இருப்பவன் போல இருந்தான்.
“நான் இனி வில்லையும் அம்பையும் என்
வாழ்நாளில் தொடவே மாட்டேன்” என்று
உரக்க கூறினான்.
“என் பின்புறத்தில் யாரோ அடிக்காமல்
இருந்திருந்தால் நான் எப்போதும் என்
இலக்கை கண்களில் மட்டுமே அடித்து
வீழ்த்துவேன் ஒருபோதும் கழுத்தில் இல்லை.”
என்றான் வஜன்.
உடனே ராஜா யார் வஜனை பின்புறம்
அடித்தாரோ அவருக்கு தண்டனை அளித்தார்.



அதன் பின் வஜன் ஒரு போதும் வில்லை அம்பையும் தொட்டதே இல்லை. அந்நாட்டு மக்களும் அவன் வாழும் காலம் வரை அவனே தலை சிறந்த வில்வீரன் என்று போற்றினர்.

முற்றும்